கனம் அங்கத்தினர் ஸ்ரீ கோவிந்தசாமி அவர்கள், ஒரு திருத்தத்தை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். திருத்தம் கொடுத்திருந்தால் ஏற்றுக் கொள்ளலாம். அப்படி ஒன்றும் கொடுக்கவில்லை. ஒரு மாதத்திற்கு பதில் இரண்டு மாதம் என்று இருந்தால்கூட ஆட்சேபணை இல்லையென்று சொன்னேன். ஆனால் ஒரு மாதம் என்றிருப்பதே போதும். பாக்கியை யெல்லாம் எப்போதும் கொடுக்க வேண்டும். கடைசியில் கொடுக்கலாம், இன்னும் 3, 4 மாதங்கள் கழித்துக் கொடுக்கலாம் என்று குத்தகைதாரர்கள் சொல்வது சரியல்ல. அறுவடையானவுடன் கொடுக்க வேண்டும். இதிலே அக்கறை காட்ட வேண்டும். இல்லாவிட்டால், பிறகு கொடுக்கலாம் என்று இருந்துவிட்டால், அது குத்தகைதாரருக்கு பின்னால் பாதகமாகப் போகும். ஆகவே, ஒரு மாதம் என்று இருப்பதே போதும். இந்த மசோதாவை நிறைவேற்றுவதிலே ஒத்துழைத்த கனம் அங்கத்தினர்கள் அனைவருக்கும் என் நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : The question is—

'That the Madras Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Bill, 1961 (L.A. Bill No. 47 of 1961) as amended be passed.'

The motion was put and carried and the Bill as amended was passed.

(3) THE MADRAS GIFT GOODS (UNLAWFUL POSSESSION) BILL, 1961, (L.A. BILL NO. 52 OF 1961).

THE HON. SRI C. SUBRAMANIAM : Mr. Deputy Speaker, Sir, I rise to move—

'That the Madras Gift Goods (Unlawful Possession) Bill, 1961 (L.A. Bill No. 52 of 1961) be taken into consideration.'

Hon. Members are aware that voluntary international organisations like the CARE, UNICEF, etc., have been supplying substantial quantities of milk powder and other commodities for distribution to school children, maternity and child welfare centres, hospitals, etc. Recently the CARE organization of America have very generously come forward to supply 18.75 million pounds of rice, 6.25 million pounds of milk powder, 3 million pounds of corn-meal and 3 million pounds of vegetable cooking oil for distribution to children in primary schools through School Meal Programme which is being implemented in our State. The value of these commodities is of the order of Rs. 3 crores.

It is the anxiety of our Government no less than that of the donors that these commodities should reach the children and other needy persons for whom they are intended and that there should be no leakage of any kind at any point in that process. We have now had experience of three months in distributing the milk powder received from the CARE organisation and the House will be glad to hear that the programme has been proceeding smoothly and

[Sri C. Subramaniam] [7th December 1961

satisfactorily. The American administrator of CARE in Madras is also satisfied with the effective arrangements made for the distribution of these commodities. However, we feel that in the interests of a complete prevention of any possible misuse that might arise, it is necessary and desirable to have strong legislation which will prove an effective deterrent. Hence this Bill. I may point out that the Bill seeks to cover only three commodities, viz., corn meal, milk powder and vegetable oil and does not include rice and wheat since it is the desire of Government to avoid any likelihood of harassment.

I am aware that the hon. Members are in a hungry mood. But this Bill is intended to facilitate the removal of the hunger of their children and other needy persons. Therefore, I hope they would not mind the late hour and consider this Bill and pass it immediately.

With these few words, Sir, I commend the motion for the acceptance of the House.

DEPUTY SPEAKER: Motion moved—

'That the Madras Gift Goods (Unlawful Possession) Bill, 1961, (L.A. Bill No. 52 of 1961) be taken into consideration.'

* **Sri M. S. SELVARAJAN:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த 'பில்' மிகவும் அவசியமானது. அதிலும் நம்முடைய ராஜ்யத்தை மதித்து, மற்ற ராஜ்யங்களுக்கு முன்னோடியாக இருக்கக்கூடிய பகல் உணவுத் திட்டம் இந்த தேசத்தில் மாத்திரம் அல்லாமல், தேசத்தின் எல்லையையும் கடந்து, உலகம் முழுமையும் பாராட்டுதலுக்கு உரியதாக அமைந்திருப்பதால், நமக்குத் தனியான உதவி அளிக்கக்கூடிய நிலைமைக்கு வரக்கூடிய அந்த உதவிகளை தகுந்த அளவுக்கு பராமரிக்கவேண்டும், தகுந்த அளவுக்கு யாருக்காக அவை வந்தனவோ அவர்களிடத்தில் தக்க பாத்திரத்தில் சேர்க்கப்படவேண்டும், அதற்குரிய கண்காணிப்பு இந்த மசோதா என்றுதான் நான் கருதுகிறேன். இதன் குறிக்கோள், எதற்காக இது கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று போடுகிற இடத்தில், விற்பனை, அதை சட்ட விரோதமாக வைத்திருப்பது இவைகளையெல்லாம் கண்காணிப்பதுதான் இந்த மசோதாவின் கருத்து என்று போடப்பட்டிருக்கிறது. ஆனால், விதிகளில் விற்பனை என்ற இனம் சரிவர தெளிவாக போடப்படவில்லை என்பது என்னுடைய கருத்து.

"If any person is found, or is proved to have been, in possession of any gift goods reasonably suspected of being stolen or un lawfully obtained, ..."

என்ற தொடர்ச்சியில் விற்பனை, ஸேல்ஸ் என்ற இனம் சரிவர காட்டப்படவில்லை. விற்பனை என்பது குற்றம் இல்லையா என்று எண்ணும்படியான கருத்தை கொடுத்துவிடுமோ என்று நான் ஐயுறுகிறேன். இங்கு தெளிவாக ஸ்டேட்மெண்டில் போட்டிருப்பதுபோல,

"In the interests of a full and effective prevention of unauthorized sale and possession of these articles, ..."

7th December 1961] [Sri M. S. Selvarajan]

என்று போட்டிருப்பதுபோலவே, ஏன் விற்பனை என்பதை குறிப்பிட்டு போடக்கூடாது என்பதற்குரிய தெளிவான விளக்கத்தை அமைச்சர் அவர்கள் வாயால் கேட்க விரும்புகிறேன். எப்படி மற்றவர்கள் விற்று அதை வாங்கிவைத்திருப்பது சட்டவிரோதமாக வைத்திருப்பதாகவும், அது குற்றமாகும் என்று சொல்லப்பட்டிருப்பதுபோல, விற்பனையும் சட்டவிரோதம், குற்றமாகும் என்று போடப்பட்டிருந்தால், மற்றவர்கள் ஜாக்கிரதையாக இருப்பார்கள், இம்மாதிரியான தீமையை தவிர்க்க முடியும் என்ற கருத்தைச் சொல்லிக்கொண்டு, என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகிறேன்.

SRI T. T. DANIEL : Mr. Deputy Speaker, Sir, I welcome this noble measure. I think that our State is the pioneer State in this relating to cognizable offence under the Criminal Procedure Code the proper distribution of the gift goods which we are getting from foreign countries. In the Statement of Objects and Reasons, I find that rice and corn meals also are included. Recently, the CARE Organisation has agreed to supply 31 million pounds of milk powder, rice, corn-meal and vegetable cooking oil for the School Midday Meals Scheme in this State. The Hon. the Minister said that rice and wheat are not included and that only corn-meal, milk powder and vegetable oil are included. I do not find any reason why rice and wheat also should not be included under the category and the definition made comprehensive. It may be applied to all kinds of gift goods, which we are getting from the four organisations that are enumerated in the Schedule. I must also bring to the notice of the Government that it is highly doubtful whether if rice and wheat are not brought within the scope, of this Bill, there will be a proper distribution of rice and wheat. In order that the legislation may be complete, it is better that we include in this Bill rice and wheat also.

So far as clause 3 of the Bill is concerned, it only speaks about the possession of gift goods unlawfully obtained. Possession only is made an offence and it is doubtful whether transport also is made an offence. I, therefore, wish that clause 3 should be so amended as to include buying, selling and also transport of unlawfully obtained gift goods, so that this doubt may not be in the minds of the Police Officers, whenever they launch prosecution. It may perhaps be even argued that the intention of the Legislature seems to be not to make the sale, purchase or transport of stolen gift goods an offence. We should, therefore, suitably modify clause 3 as to make these acts in respect of gift goods an offence and to carry the punishment according to the nature of the offence committed.

Then coming to clause 4, it says that an offence under this Act is a congnizable offence. But the question remains as to who can make searches, whether any police officer can make it and if a police officer can make a search of the house or any place under what provisions of the law such a search can be conducted. I think, Sir, that in the Bill there must be some provision relating to the search that should be conducted for detecting the offence and it

[Sri T. T. Daniel] [7th December 1961

shall be stated in the Bill itself that a responsible officer not below
2-00 p.m. the rank of a Sub-Inspector or an Inspector of Police shall be given power to conduct this search for finding out such gift goods, if the police suspects them to be stolen or unlawfully obtained. Otherwise, it may appear that the Police has no power to conduct search. At least there should be a clause in the Bill that all the provisions relating to cognizable oence under the Criminal Procedure Code should apply to the investigation of crimes under this Bill.

SRI V. K. KOTHANDARAMAN: ஸார், இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன். எனக்கு முன்னால் பேசிய கனம் அங்கத்தினர்கள், குறிப்பிட்டது போல, மூன்றாவது பிரிவில் குறிப்பிட்டிருப்பதைப் பார்க்கும் போது, யாராவது இம்மாதிரியான பொருள்களை திருடினார்களோ இல்லையோ, யாரிடமாவது இப்படிப் பட்ட பொருள்கள் இருந்து, அதற்கு அவர் சரியான ஜவாப் சொல்ல முடியவில்லை என்றால், அவர் அதை திருடினார் என்ற காரணத்தின் பேரில் அவருக்கு தண்டனை என்று சொல்லப் பட்டிருக்கிறது. வெளிநாடுகளிலிருந்து, யாரோ குழந்தைகளின் நன்மைக்காக கொடுக்கும் பொருள்களை, பெரிய மனிதர்களாகப் பார்த்துத்தான் அந்த விநியோகம் செய்யப்படுகிறது. அப்படிப் பட்ட பெரிய மனிதர்கள் தங்கள் பொறுப்பில் கொடுக்கப்படும் பொருள்களை மற்றவரிடம் எடுத்துக்கொடுக்காவிட்டால், அது மற்றவர்கள் கையில் வராது. ஆகையினால், எந்த பெரிய மனிதர்கள் வசம் ஒப்படைக்கிறோமோ அவர்களுக்கும் இதில் பொறுப்பு இருக்கிறது என்று செய்ய வில்லை என்றால், பின்னால், அவர்களே எடுத்துக் கொடுத்திருந்தாலும், விற்பனை செய்து இருந்தாலும், அவர்களை ஒன்றும் செய்ய முடியாமல் போய்விடும். அவர்களை தண்டனைக்கு உள்ளாக்க சட்டத்தில் இடம் இல்லை என்று சொல்லி விடுவார்கள். ஆகவே, இந்த மசோதா, அப்படிப்பட்ட பெரிய மனிதர்களைப் பாதுகாக்கும் முறையிலேயே அமைந்திருக்கிறது. அவர்களுக்கும் தண்டனை கொடுக்கும் முறையில் இல்லை. "பொருள்களை வைத்துக் கொண்டிருக்கிறவர்கள்" என்று மட்டுமே செய்வதால் அப்படிப்பட்ட நிலைமைதான் ஏற்படுகிறது. அந்தப் பொருளை கண்காணிக்க வேண்டியவர்கள், எடுத்துக் கொடுத்து விட்டார்கள் அல்லது விற்பனை செய்து விட்டார்கள் என்றால் அவர்களுக்கும் தண்டனை கொடுக்கும் முறையில் இதைத் திருத்தி அமைக்க வேண்டும். அவர்களுக்கு இரண்டு பங்கு தண்டனை என்ற முறையிலும் செய்யவேண்டும். ஏதோ கிராமத்தில் சொல்வார்கள், "பிச்சை எடுத்ததாம் பெருமாள், அதைப் பிடுங்கித்தாம் அனுமார்" என்று; ஆகவே, இம்மாதிரி தர்மத்திற்காகக் கொடுக்கும் பொருள்களை விநியோகிப்பதில் ஊழல்கள் ஏற்படும் நிலைமை ஏற்படுவதைத் தடுக்க எல்லா வழிகளிலும் முயற்சி செய்யவேண்டும். ஆகவே, இந்த துர்விநியோகத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்கெல்லாம் கடுமையான தண்டனைகள் கொடுக்கவேண்டும். அம்மாதிரி பொறுப்புள்ளவர்கள் மேல் நடவடிக்கை எடுக்க ப்ரொவிஷன் இல்லை என்றால், அது வேண்டுமென்றே செய்யப்படுகிறதோ என்றுதான் நினைக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, அந்த முறையில் இதைத் திருத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

7th December 1961]

SRI K. ANBAZHAGAN: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, வெளிநாட்டார் தருகிற நன்கொடைப் பொருள்கள் நியாயமான முறையில் பயன் படுத்தப்படாமல், தவறான வழிகளில் இவைகள் சிலரால் கையாளப்படுவது நிறுத்தப்படுவதற்காக, இப்படிப்பட்ட ஒரு சட்டம் வருவது மிக மிக இன்றியமையாதது என்பதை ஏற்றுக் கொள்கிறேன், வரவேற்கிறேன். ஆனால், இப்படிப் பட்ட சட்டம் வருகிறபோது, இதனால் சில தவறுகள் ஏற்படாமல், ஏற்பட இடம் இல்லாமல் கொண்டுவரப்படவேண்டும் என்று எனக்கு முன்பு பேசிய சில உறுப்பினர்கள் குறிப்பிட்டது போல, இந்தப் பொருள்கள் யாரிடத்தேனும் இடம் பெற்று இருந்தால், அவர்கள் விற்பனைக்கு வைத்து இருந்தால், அதைக் கண்டுபிடிக்கும், குற்றம் சாட்டும் அதிகாரி யார் என்றும், எந்த தரத்தில் உள்ளவராக இருக்க வேண்டுமென்றும் இதிலே குறிப்பிடப்பட்டிருந்தால், அது நல்லது என்று கருதுகிறேன். அதே போல, இந்தப் பண்டங்கள் பொதுவாக ஏழைக் குழந்தைகளுக்கு அளிக்கப்படுவதற்காக, அரசாங்கத்தின் துணை மூலமாக வெளி நாடுகளிலிருந்து பெறப்பட்டு, யாரிடத்தில் ஒப்படைக்கப்பட்டதோ, அவர்களிடமிருந்து இடம் மாறி வேறு எவரிடத்தேனும் சேர்க்கப் பட்டிருந்தால், அவர்களும் இதற்கு உடந்தையாக இருந்தார்கள் என்று ஒப்படைக்கப்பட்டவர்களும் தண்டனைக்கு ஆளாக்கப்பட வேண்டும் என்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டால் தான், தவறான வழியில் பொருள்கள் போகாமல் இருக்கும். மற்றொன்று குறிப்பிட விரும்புகிறேன். பண்டங்களின் உருவத்தை அழித்து, வேறு மாற்றுப் பண்டங்களாக்கும் திறமையில் நம் நாட்டில் சிலர் திறமைப்பட்டவர்களாக காணப்படுகிறார்கள். அடையாளங்களை மாற்றும் ஆற்றல் அவர்களுக்கு இருக்கிறது. சில நாட்களுக்கு முன் நான் கேள்விப்பட்டதைக் குறிப்பிட விரும்புகிறேன். கோதுமை மூட்டைகளை—பொதுக் காரியங்களுக்காக அளிக்கப் பட்டவை ஒரு நிலயத்திலிருந்து இன்னொரு நிலயத்திற்கு விற்கப்பட்டிருக்கிறது; விற்ற ரசீதுகள்கூட இருக்கின்றன என்று தெரிவித்தார்கள். முழு விவரமும் தெரிவிக்கும்படி சொல்லியிருக்கிறேன், முழு விவரமும் தெரியாமல், வெளியிட்டு பயன் இல்லை என்று. தர்மத்திற்காக கொடுக்கப்படும் பண்டங்களை அவர்களுடைய லாபத்திற்கு சுய நலத்திற்குப் பயன்படுத்த இடமிருக்குமானால், வெளியிலே விட்டிருப்பார்களேயானால், அவர்களும் தண்டிக்கப் படுவதற்கு வாய்ப்பு, வழிவகை இதிலே ஏற்படுத்த வேண்டும் என்று கருதுகிறேன்.

மூன்றாவதாக நான் தெரிவிக்க விரும்புவது, உணவுப் பண்டங்களில், மிக இன்றியமையாததாக இருக்கும் இரண்டு மூன்று பண்டங்கள் சேர்க்காமல் இருந்தாலும், கோதுமையைச் சேர்ப்பது நல்லது என்று தெரிவிக்கிறேன். அரிசியை விட்டு விட்டாலும், கோதுமையைச் சேர்த்தால், இந்த சட்டத்தின் முழுப்பயன் கிடைக்கும் என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

நீதி மன்ற தீர்ப்பின்படி, இப்படிப்பட்ட பொருள்களை வைத்திருந்தவர்கள் தண்டனைக்கு உரியவர்கள் ஆகமாட்டார்கள் என்ற கருத்தைச் சொல்லி இருப்பதால், இந்தச் சட்டம் கொண்டு

[Sri K. Anbazhagan] [7th December 1961

வந்திருப்பதை வரவேற்கிறேன். தண்டனை கடுமையாக இருப்பதையும் வரவேற்கிறேன். சமுதாயத்தில் பல தவறுகள் தொடர்ந்து நடை பெறுவதால், இதற்கென்று ஒரு சட்டத்தைச் செய்வதுதான் நலம். ஆனால், அதில் "லூப்ஹோல்ஸ்", இடைவெளிகள் இல்லாமல் இந்த சட்டத்தை மறுபடி பரிசீலனை செய்து, இன்று முடியாவிட்டாலும், நாளையாவது பரிசீலனை செய்து அதற்கான திருத்தங்கள் கொடுத்து, அமைச்சரவர்கள் இதை நிறைவேற்ற முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : Further discussion on the Bill will continue tomorrow.

V. ANNOUNCEMENT.

BUSINESS OF THE HOUSE.

DEPUTY SPEAKER : I have to announce to the House that the Business Advisory Committee at its meeting held today has decided upon the further programme of business :—

8th December 1961	Official Bills.
9th December 1961	Presentation of Interim Budget for 1962–63.
11th December 1961	Presentation of— (1) Final Supplementary Estimates. (2) Statement of Demands for Grants for Excess Expenditure in the year 1958–59.
11th December 1961 ... ... 12th December 1961 ... ... 13th December 1961	Discussion on the Interim Budget for 1962–63.
14th December 1961	(1) Voting on Demands for Grants (12 noon). (2) Discussion and voting on Supplementary Estimates (1 p.m.) (3) Discussion and voting on the Statement of Demands for Grants for Excess Expenditure in the year 1958–59 (1-30 p.m.). (4) Introduction of Appropriation Bills.
15th December 1961	Official Bills.
16th December 1961	Consideration and passing of Appropriation Bills.

The House will now adjourn and meet again at 8–30 a.m., tomorrow.

The House then adjourned.